## இயல் 6.3 - விகிதம் மற்றும் விகித சமம்

பயிற்சி எண் :: 6.3.3.3.C

விகிதம் - சமான விகிதங்கள் - த.நா.அ.பு - பயிற்சி 3.3.6-8

## விகிதம் - சமான விகிதங்கள் - த.நா.அ.பு - பயிற்சி 3.3.6-8

6 . அமெரிக்காவின் பிரபலமான தங்க நுழைவு வாயில் பாலம் 6480 அடி நீளமும் 756 அடி உயரமும் கொண்ட கோபுரங்களைக் கொண்டது. ஒரு கண்காட்சியில் பயன்படுத்தப்பட்ட அதன் மாதிரிப் பாலத்தின் நீளம் 60 அடி மற்றும் உயரம் 7 அடியாகும். பயன்படுத்தப்பட்ட பாலத்தின் மாதிரி ஆனது உண்மைப் பாலத்திற்கு விகித சமமாக உள்ளதா?

உண்மை பாலத்தின் விகிதமும், மாதிரிப் பாலத்தின் விகிதமும்.

$6480 : 756 :: 60 : 7$

$\cancel{6480}^{1080} : \cancel{756}^{126} :: 60 : 7$ [6-ஆல் வகுக்கக் கிடைப்பது]

$1080 : 126 :: 60 : 7$

$\cancel{1080}^{180} : \cancel{126}^{21} :: 60 : 7$ [6-ஆல் வகுக்கக் கிடைப்பது]

$180 : 21 :: 60 : 7$

$\cancel{180}^{60} : \cancel{21}^{7} :: 60 : 7$ [3-ஆல் வகுக்கக் கிடைப்பது]

$60 : 7 :: 60 : 7$ [∴ விகிதங்கள் சமமாக உள்ளன.]

உண்மை பாலத்தின் விகிதமும், மாதிரிப் பாலத்தின் விகிதமும் சமமாக உள்ளன.

7. ஒரு நபர் 2 மணி நேரத்தில் 20 பக்கங்களைப் படிக்கிறார் எனில் அதே வேகத்தில் 8 மணி நேரத்தில் அவரால் எத்தனை பக்கங்கள் படிக்க முடியும்?

ஒரு நபர் 2 மணி நேரத்தில் படிக்கும் பக்கங்கள் = 20

1 மணி நேரத்தில் படிக்கும் பக்கங்கள் = $\frac{20}{2}$

$= \frac{\cancel{20}^{10}}{\cancel{2}_{1}} = 10$

எனில், 8 மணி நேரத்தில் படிக்கும் பக்கங்கள் = $10 \times 8 = 80$

8 மணி நேரத்தில் அவரால் 80 பக்கங்களைப் படிக்க இயலும்.

8 . சோழன் சீரான வேகத்தில் நடந்து 6 கி.மீ தொலைவை 1 மணி நேரத்தில் கடக்கிறார் . அதே வேகத்தில் அவர் 20 நிமிடங்களில் நடந்து கடக்கும் தொலைவு எவ்வளவு?

சோழன் 1 மணி நேரத்தில் கடக்கும் தொலைவு = 6 கி.மீ

1 மணி நேரம் = 60 நிமிடங்கள்

∴ அவர் 1 நிமிடங்களில் கடக்கும் தொலைவு = $\frac{6}{60}$

$= \frac{\cancel{6}^{1}}{\cancel{60}_{10}} = \frac{1}{10}$ கி.மீ

∴ அவர் 20 நிமிடங்களில் கடக்கும் தொலைவு = $\frac{1}{10} \times 20$

$= \frac{20}{10}$

$= \frac{\cancel{20}^{2}}{\cancel{10}_{1}}$ = 2 கி.மீ

சோழன் 20 நிமிடங்களில் நடந்து கடக்கும் தொலைவு = 2 கி.மீ

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 8th March, 2022 :: 04:50 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**